

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட அண்ணனூர் ஜோதி நகர் பகுதியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, ஆவடி சா.மு.நாசர் மழை நீர் வெளியேற்றும் பணிகள் தொடர்பாக நேரில் ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர். உடன் நகராட்சி நிர்வாகம் முதன்மை செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், நகராட்சி நிர்வாகத்துறை இயக்குநர் ப. மதுசூதன் ரெட்டி, மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், மேயர் கு.உதய குமார் ஆணையர் ரா.சரண்யா,ஜி. ராஜேந்திரன், சன்.பிரகாஷ், மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

### சைதை தொகுதி – சத்யா நகரில் – நீர்வளத்துறைக்குச் சொந்தமான ரூ.200 கோடி மதிப்பிலான ஆக்கிரமிப்பு நிலம்!

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் முயற்சியால் மீட்பு!

## ‘நடைபாதை – சிறுவர் பூங்கா – நீர்நிலைகள் அமைக்கப்படும்’ என அமைச்சர் அறிவிப்பு!



சென்னை, டிச.3-

சைதாப்பேட்டை தொகுதி சத்யாநகரில் நீர்வளத்துறைக்குச் சொந்தமான ரூ.200 கோடி மதிப்பிலான ஆக்கிரமிப்பு இடம் மீட்கப்பட்டது, ஆக்கிரமிப்பு மீட்கப்பட்ட இந்த இடத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடைபாதை, சிறுவர் பூங்கா மற்றும் நீர்நிலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆக்கிரமிப்பு இடத்தினை மீட்டு தெரிவித்தார்.

அதன் விவரம் வருமாறு:-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (02.12.2025) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, அடையார் மண்டலம், வார்டு 169, சத்யா நகர் பகுதியில் நீர்வளத்துறைக்குச் சொந்தமான ரூ.200 கோடி மதிப்பிலான ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் சென்னையில் பல்வேறு இடங்களில் புதிய சுற்று ச்சூழல் பூங்காக்களை உருவாக்கி வருகிறார்கள். அந்த வகையில் கடந்த மாதம் சைதாப்பேட்டையில் 118 ஏக்கர் நிலப்பரப்பளவில் எம்.ஆர்.சி. மைதானத்தில் புதிய சுற்றுச்சூழல் பூங்கா பணிகளைத் தொடங்கி வைத்தார்கள். சென்னையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்த போது அடையாற்றை ஒட்டி இருக்கின்ற 358 ஏக்கர் நிலப்பரப்பளவில் இருந்து 58 ஏக்கரை எடுத்து தொல்காப்பியர் சுற்றுச்சூழல் பூங்கா திட்டமிடப்பட்டு 2006 முதல் 2011 வரையிலான திமுக ஆட்சி காலத்தில் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் வந்த அரசு தொல்காப்பியர் பூங்காவின் பெயரை அடையாறு பூங்கா என்று பெயர் மாற்றியதோடு மட்டுமல்லாமல் பராமரிப்பு இல்லாமல் பாழடைந்து சிதிலமடைந்து கிடந்தது.

முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் ரூ.44.50 கோடி ஒதுக்கீடு செய்து தொல்காப்பியர் பூங்காவில் பல்வேறு புதிய வசதிகளை ஏற்படுத்தி திறந்து வைத்தார்கள். இந்த நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீர்நிலைகளை பாதுகாப்பதும், நீர்நிலைகளை மேம்படுத்தும் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். அந்தவகையில் ரூ.1500 கோடி செலவில் அடையாற்றை ஆழப்படுத்தி அகலப்படுத்தி தூர்வாரி, இரண்டு பக்கமும் பலமான கரைகளை அமைத்து, அடையாற்றின் கரையோரம் உள்ள குடியிருப்புகளில் இருந்து கழிவுநீர் கலக்காத வன்னம் நடவடிக்கைகளை எடுத்து, இந்த பகுதியை சுற்றுலாத்தலமாக அமைக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அடையாற்றின் ஓரம் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மறு குடியமர்வு கொடுப்பது இந்த அரசின் இலக்கு. அந்த வகையில் சத்தியா நகரில் 226 குடிசைகளை உயர்நீதிமன்ற உத்தரவின்படி கோட்டூர்புரம் பகுதியிலும், பெரும்பாக்கம் பகுதியிலும் மறு குடியமர்வு செய்யப்பட்டுள்ளனர். நீர்நிலை ஆதாரத்துறை இந்த இடம் தங்களுக்கு சொந்தமானது என்று வேலி அமைத்து அறிவிப்புப் பலகையினை வைத்திருந்தார்கள்.

இந்தநிலையில் யாரோ தனியார் முறைகேடாக இந்த நிலத்திற்கு பட்டா பெற்று ஏராளமானவர்கள் தங்களுக்கு சொந்தமானது என்று கூறிவந்தார்கள். 1996 ஆம் ஆண்டு நான் இந்த மண்டலத்தின் தலைவராக இருந்த காலத்தில் இருந்தே பிரச்சனையாக இருந்து வந்தது. ஆனால் கடந்த வாரம் யாருக்கும் தெரியாமல் இந்த இடத்தில் வேலி அமைத்ததோடு மட்டுமில்லாமல், ரங்கராஜபுரம் மற்றும் ஸ்ரீநகர் பகுதிகளில் இருந்து வரும் மழைநீர் இணைப்பையும் துண்டித்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். உடனடியாக மாவட்ட ஆட்சியர் இடத்திலும், மாநகராட்சி ஆணையர் இடத்திலும் இதனை தெரியபடுத்தி ஆக்கிரமிப்பை அகற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது இது அரசுக்கு சொந்தமான இடம் என்று அறிவிப்பு பலகை வைக்கப்பட்டு, ஆக்ரமிப்பாளர்கள் மீது காவல் துறையிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் யாரேனும் அரசு அலுவலர்களுக்கு தொடர்பு இருந்தால் அவர்களின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி ஆணை யர் அவர்களிடம் இந்த இடத்தில் நிரந்தர சுற்று ச்சுவர் கட்ட வேண்டும் என்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் நடை பாதை, சிறுவர் பூங்கா மற்றும் நீர்நிலைகள் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது, விரைவில் அந்தப் பணிகள் தொடங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

டித்வா புயல் பாதிப்பு தொடர்பான கேள்விக்கு அமைச்சர் தெரிவித்ததாவது:-

1995, 2005, 2015 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளில் டிசம்பர் மாதங்களில் பெரு மழையினால் சென்னை பாதிக்கப்பட்டு வருகிறது. 2015 டிசம்பரில் பெய்த மழையின் காரணமாக செம்பரம்பாக்கம் ஏரி திறந்து விட்டதால் எற்பட்ட வெள்ளத்தினால் சென்னை நகரம் முழுவதும் பாதிக்கப்பட்டது. ஆனால் 2025 இல் அந்த அளவிற்கு பாதிப்பு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள 22 சுரங்கப்தையில் இடையூறு இல்லாமல் போக்குவரத்து சிறப்பாக நடைபெற்று வருகிறது. 20 செ. மீட்டருக்கும் மேல் மழை பெய்தாலும் பெரிய அளிவிலான பாதிப்பு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் நேரடியாக களத்தில் வராமல் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளதை போன்று குறை கூறி வருகிறார். அவர் சென்னைக்கு வந்து எந்த பகுதியில் பாதிப்பு உள்ளது என்று சுட்டிக்காட்டினால் சரிசெய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அவர் கஜா புயலின்போது கூட விரைந்து ஆய்வு மேற்கொள்ளாமல் ஒரு வாரம் கழித்து தான் களத்திற்கே வந்தார். அவர் தற்போது அரசின் மீது குறை கூறுவது விந்தையாக உள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மண்டல அலுவலர் எஸ். செந்தில்குமரன், நீர் வளத் துறை உதவி செயற்பொறியாளர் மகேந்திரகுமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தாம்பரம் மாநகரில் மழை பெய்து வரும் நிலையில் மண்டலம்–3,41,வது வட்டத்தில் உள்ள சீனிவாசா நகர் 2வது தெருவில் 30 ஆண்டுகள் பழமையான பெரிய மரம் ஒன்று சாலையின் குறுக்கே விழுந்த வேகத்தில் சாலையின் அருகில் இருந்த முன்று மின் கம்பத்தின் மீது விழுந்தது அந்த பகுதியில் வசிக்கும் 100,க்கும் மேற்பட்ட குடும்பத்தினர்கள் வசிக்கும் இல்லங்களில் இதனால் மின்சார துண்டிக்கப்பட்டுள்ள தகவலறிந்த மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ நேரில் சென்று மாநகராட்சி ஊழியர்களை மரத்தினை அப்புறப்படுத்திடவும் மேலும் பழுதடைந்த மின்கம்பத்தை சீரமைத்து விரைவாக மின் இணைப்பு வழங்கிட மின்சார துறை அதிகாரிகளிடம் தெரிவித்தும் பணி முடியும் வரையில் ஆங்கேயே இருந்து செயல்பட்டார் உடன் செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மின்சார வாரிய உயர் அலுவலர்கள் ஊழியர்கள் மாநகராட்சி அதிகாரிகள் ஊழியர்கள் மற்றும் சீனிவாசா நகரில் வசிப்பவர்கள் என உடனிருந்தனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் இளைஞர் எழுச்சி நாள் முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் கே.வி.லோகேஷ் ஏற்பாட்டில் பெரியபாளையம் அரசு மருத்துவமனையில் நவ 27ஆம் தேதி அன்று பிறந்த 3 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் 10 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் பொருட்களை மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் வழங்கினார் உடன் ஒன்றிய செயலாளர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, நிர்வாகிகள் மு.பகலவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், ஏவி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன் , வெங்கடாசலபதி, அபிராமி குமரவேல், ஜெ. மோகன்பாபு, டி.சங்கர், கதிரவன், க.சம்பத், விபி.ரவிக்குமார், ஜெயலலிதா, பா.து.தமிழரசன், சுமன், ஜெய்சங்கர், ரவி, ஜமுனா அப்புன், முனுசாமி, சீனிவாசன், ஐ.ராஜா, தினேஷ், லோகேஷ், அசோகன், உள்பட பலர் உள்ளனர்



செங்கல்பட்டு அரசு மருத்துவ மனையில் திருக்கழுக்குன்றம் வட்டம். குன்னத்தூர் கிராமத்தில் நடந்த விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சர் அறிவித்த நிவாரண தொகையான விபத்தில் உயிரிழந்த கீழார்கொள்ளை கிராமத்தை சேர்ந்த உமா மற்றும் பானு ஆகியோர் குடும்பத்தி னருக்கு ரூ.3 லட்சத்திற்கான காசோலைகளையும், படுகாயமடைந்த 14 நபர்களுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம், காயமடைந்த 4 நபர்களுக்கு ரூ.50000/த்திற்கான காசோலைகளை வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் தி. சினேகா, மு.பாபு எம்.எல்.ஏ., சார் ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன், மருத்துவமனை முதல்வர் மரு.பிரியா பசுபதி, செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன் மற்றும் மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### விமானப் போக்குவரத்துத்துறை

# பணியாளர்களுக்கு போதுமான பயிற்சி வழங்கப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!



புதுடெல்லி, டிச.3-

விமான போக்குவரத்துத் துறை பணியாளர்களுக்கு போதுமான பயிற்சி வழங்கப்பட்டுள்ளதா என ஒன்றிய அரசிடம் நாடாளுமன்றத்தில் இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

நாடாளுமன்றத்தில் இந்த ஆண்டுக்கான குளிர்கால கூட்டத்தொடர் நேற்று (டிசம்பர் 1) தொடங்கியுள்ள நிலையில், அதில் கலந்து கொண்ட இரா.கிரி ராஜன், அலகாபாத்தில் உள்ள சிவில் விமானப் போக்குவரத்துப் பயிற்சிக் கல்லூரி மற்றும் அதன் நான்கு மண்டல கல்லூரிகள் மூலமாக விமான போக்குவரத்தின் தொடர்பு வழிசெலுத்தல் கண்காணிப்பு பணியாளர்களுக்கும் (CNS), விமானப் போக்குவரத்து மேலாண்மை பணியாளர்களுக்கும் (ATM) தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளனவா என சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்துள்ள அத்துறையின் இணை அமைச்சர் முரளிதர் மோஹோல், 2021-22ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 8,080 வழிசெலுத்தல் கண்காணிப்பு பணியாளர்களுக்கும், 17,013 விமானப் போக்குவரத்து மேலாண்மை பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பேரூர் செயலாளர் டி.மோகன்தாஸ் தலைமையில் – சித்தாமூர் ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு

# ஜெ.சங்கர் தாயார் ஜெ.நவநீதம் திருவுருவப்படம்!

## அப்துல் மாலிக் – பனையூர் மு.பாபு எம்.எல்.ஏ. திறந்து வைக்கின்றனர்!



காஞ்சிபுரம், டிச.3-

இடைக்கழிநாடு பேரூர் துணை செயலாளர் - சித்தாமூர் ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் முன்னாள் கவுன்சிலர் ஜெ. சங்கர் தாயார் திருமதி ஜெ.நவநீதம் படத்திறப்பு விழா இன்று (3.12.20205 - புதன்) மலை 6.00 மணியளவில் செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி, வார்டு 12, கடப்பாக்கம் கிளையில் , பேரூர் செயலாளர் டி. மோகன்தாஸ் தலைமையில், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக், செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் மு.பாபு எம்.எல்.ஏ. ஆகியோர் திறந்து வைக்கின்றனர்.

காஞ்சி தெற்கு மாவட்ட அவைத் தலைவர் ச இனியரசு, ஒன்றிய செயலாளர்கள் ஏழுமலை, எ. சிற்றரசு, மாவட்ட மீனவரணி அமைப்பாளர் ஏ.என்.பரத், 12-வது வார்டு கழகச் செயலாளர் திருமலை, பேரூராட்சி 16-வது வார்டு மன்ற உறுப்பினர் பொறியாளர் பெ.பிரபு (எ) ஜெயலட்சுமணன் மற்றும் மாவட்ட கழக, ஒன்றிய கழக, பொறுப்பாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

மேலும் பேரூர் துணை செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், இளைஞர் அணி பொறுப்பாளர்கள், பேரூராட்சி தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் திரளாக கலந்து கொள்ள இருக்கின்றனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, மதுரவாயல் சட்டமன்ற தொகுதி, 151வது வார்டில் தொடர் மழையினால் ஏற்பட்ட நீர்த் தேக்க பகுதிகளான சுப்பிரமணிய சுவாமி நகர், எஸ்.வி.எஸ் நகர் பிரதான சாலை, புத்தப்பேடு, எஸ்.வி.எஸ் நகர் ஏரி மற்றும் ஜெய்நகர் ஆகிய மழை நீர் தேங்குகின்ற இடங்களை ஆய்வு மேற்கொண்டு மழை நீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொண்டதோடு, தொடர் மழையை முன்னிட்டு பகுதி வாழ் மக்களுக்கு காலை மற்றும் மதிய உணவினை சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், 151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஸ் வழங்கினார்.



சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனைப்படி, பகுதி துணை அமைப்பாளர் ஆர்.ஸ்ரீதர் ஏற்பாட்டில் சட்டமன்ற உறுப்பினர் நா. எழிலன், பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம், மாவட்ட அமைப்பாளர் பா.பிரகாஷ், வட்டச் செயலாளர் கே.எஸ்.தினேஷ் பிரபு, மாவட்ட அமைப்பாளர் டி.எஸ்.ராஜா முன்னிலையில் 110 வது வட்டத்தில் கழகக் கொடி ஏற்றி, இனிப்பு, அறுசுவை உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டது. உடன் வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.